தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 | UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 | Available at: www.ijtlls.com

# *அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ்* காட்டும் நிலச்சூழலியல்

## Land Ecology Portrayed in *Arultharu Poongothaiyannai Pillaithamil*

**திருமதி ந. தமிழரசி,** தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 2021R1150, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**Mrs. N. Tamilarasi,** Ph.D Scholar of Tamil, Reg. No.: 2021R1150, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Affiliated to Bharathiar University, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2450-4671**
**முனைவர் ஆ. மகாலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**Dr. A. Mahalakshmi,** Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Affiliated to Bharathiar University, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.10122292**

### Abstract

*Nature is the best gift of God to life. Nature is self-appearing and disappearing without human intervention. This beauty of nature can be seen in literature. Literature helps us to know about nature. From Sangam literature to contemporary literature, all of them are inspired by nature's beauty. The purpose of this article is to explore the nature and environment of the land located in "Arultharu Poongotaiyana Pillaithamil". The land is what sustains countless living and non-living beings and things. Trees and plants make good use of these. In Tamil country, land has been classified into five types in the Sangam literature namely Kurinji, Mullai, Marutham, Neithal and Palai. They mentioned that the hilly place is Kurinji, the Forest is Mullai, the Field is Marut, the Sea is Neithal, and the desert place is Palai. In Sangha literature, land stood as a symbol of life. Hence, ecology refers to the nature that surrounds us. "Arultharu Poongothaiannai Pillaithamil" is filled with innumerable ecological thoughts. The role of five elements (Panchabhutas) in nature is very essential. Very important of them is the land and it shows how the living organisms on the land contribute to ecology. All living things on land depend on each other. Hence, land plays a major role in maintaining ecology. The article studies how violence is done by man on the land and how we can recover it through the land-oriented ecological values from "Arultharu Poongotaiyana Pillaithamil".*

**Keywords:** Land, Ecology, Portrayal, *Arultharu Poongothaiyannai Pillaithamil.*

### ஆய்வுச்சுருக்கம்

*இறைவன் உயிர்களுக்கு அளித்த மிகச்சிறந்த பரிசு இயற்கையாகும். இயற்கை என்பது மனிதனின் செயல்பாடு இன்றி தானாகவே தோன்றி மறைவதாகும். இந்த இயற்கையைப் பற்றி அறிந்து கொள்ள இலக்கியங்கள் உதவுகின்றன. சங்ககால இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை அனைத்துமே இயற்கையின் எழிலையும் சிறப்பையும் எடுத்த*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

*இயம்புவதாகவே உள்ளன. அவ்வகையில் அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ் நூலில் அமைந்துள்ள நிலத்தின் சிறப்பையும் சுற்றுச்சூழலையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. எண்ணற்ற உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள் நிலையாக வாழ உதவுவது நிலமாகும். இவற்றை மரங்கள் மற்றும் தாவரங்கள் நன்முறையில் பயன்படுத்திக் கொள்கின்றன. இத்தகைய நிலத்தை இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து வகைகளாகப் பாகுபடுத்தினர். மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சியாகவும், காடும் காடு சார்ந்த இடம் முல்லையாகவும், வயலும் வயல் சார்ந்த இடம் மருதமாகவும், கடலும் கடல் சார்ந்த இடம் நெய்தலாகவும்,குறிஞ்சியும் முல்லையும் தனது இயல்பிலிருந்து மாறுபடுவதை பாலை நிலம் என்றும் குறிப்பிட்டனர். சங்க இலக்கியங்களில் நிலமானது வலிமை மற்றும் பொறுமை ஆகியவற்றிற்கு சான்றாக விளங்கியது. அவ்வகையில் அருள் தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழில் எண்ணற்ற சூழலியல் சிந்தனைகள் நிரம்பியுள்ளன. சூழலியல் என்பது நம்மைச் சூழ்ந்துள்ள இயற்கையைக் குறிப்பதாகும். அவ்வியற்கையில் பஞ்சபூதங்களின் பங்கு இன்றியமையாதது. அவற்றில் ஒன்றான நிலம் பற்றியும் நிலத்தில் வாழ்கின்ற உயிரினங்கள் சூழலியலுக்கு உதவும் சிறப்பு பற்றியும் ஆராயப்பட உள்ளது. நிலத்தில் வாழும் உயிரினங்கள் ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்தே வாழ்கின்றன. எனவே அவைகள் சூழலியலைப் பராமரிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. சூழலியலில் மனிதனே மிகப்பெரிய காரணியாகக் கருதப்படுகின்றான். மனிதனின் பலவகையான செயல்களால் ஒட்டுமொத்த சூழலியலும் பாதிப்படைகின்றன. அதில் நிலத்தின் மீது மனிதன் நிகழ்த்தும் வன்முறையில் நிலச்சூழலியல் பாதிக்கப்படுவதையும் அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்து இயம்புவதாகவும் இக்கட்டுரையானது அமைகிறது.*

**திறவுச்சொற்கள்**: நிலம், சூழலியல், சித்தரிப்பு, *அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ்.*

**முன்னுரை**

இலக்கியங்கள் என்பன மனித வாழ்வைப் பறைசாற்றும் வரலாற்றுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை எழுந்துள்ள பெரும்பாலான நூல்கள் மனிதர்களின் வாழ்வையும், சுற்றுப்புறச் சூழலையும் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. அவ்வகையில் சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத்தமிழில் காணலாகும் நிலம் சார்ந்த சூழலியல் கருத்துக்களைப் பதிவு செய்வதாக இக்கட்டுரையானது அமைகிறது.

**நூற்பெயர்:** *கோவை ஒற்றைக்கால் மண்டபம் அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ்.*

**ஆசிரியர்:** சித்தாந்தச் செழுங்கதிர் முனைவர் ந. இரா. சென்னியப்பனார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

**உலகின் தோற்றம்**

பூமியானது ஐம்பூதங்களின் கூட்டாகும். இவைகள் ஐந்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இதைத் தொல்காப்பியர்,

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (தொல், மரபியல், நூ. 635)**

என்று குறிப்பிடுகிறார். மேலும், இத்தகைய இயற்கையைக் கடவுளாக எண்ணி மக்கள் வழிபட்டுக் கொண்டு வருகின்றனர் என்பதை, **நிலனாய் புனலாய் கனலாய் நிதமாய் வடியும் நிமலமே (முய.பூ பிள். த., பா. 59)** என்ற வரிகளில் காண முடிகிறது. மேற்கூறிய எட்டு வடிவங்களில் அமைந்திருப்பவள் இறைவியே என்பதைச் சென்னியப்பனார் குறிப்பிடுகிறார். இதன் வாயிலாக பஞ்ச பூதங்களை நாம் இறையாக எண்ணி வழிபட்டதை அறிய முடிகிறது. இத்தகைய **பஞ்சபூதங்களும் ஓரிடத்தில் வாழ்கின்ற தனி மனிதனால் மாசடைவதில்லை. பல கோடி மக்கள் அவற்றை மாசுபடுத்தும் போது அவை கவலைக்குரிய இடமாகி விடுகின்றன. (சுற்றுச்சூழலும் தற்சார்பும், ப. 12)** இந்த ஐந்து பூதங்களும் மனிதனைக் கட்டுப்படுத்திய போது துன்பமின்றி உலக உயிர்கள் வாழ்ந்து கொண்டிருந்தன. ஆனால் மனிதனின் பேரறிவாலும், வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியாலும் அவற்றை நாம் ஆள நினைத்தபோது சூழலியல் மாறியதோடு இயற்கை வாழ்வியலும் பாதிப்புக்குள்ளானது. இத்தகைய **பஞ்சபூதங்களின் சேர்க்கையில் ஐன்ஸ்டீனின் சார்பியல் சிந்தனை கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது. (ஜெ. கவிதா, ப. 9)** இதன் வாயிலாக மனிதர்கள் மேற்கொள்ளும் இயற்கை வழிபாட்டு முறைகளில் எண்ணற்ற அறிவியல் சார்ந்த கருத்துக்கள் அமைந்துள்ளன. அதற்கான காரணத்தை அறிந்து முறையாகக் கடைபிடித்து வாழ்வதே சிறந்ததாகும் என்பதை உணர முடிகிறது.

**சுற்றுச்சூழல்**

உயிர்கள் வாழ்கின்ற பூமிப்பந்தினை சுற்றியுள்ள பகுதிகளே சுற்றுப்புறமாகும். சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசுபாட்டின் காரணமாக தற்காலத்தில் சூழலியல் பற்றிய எண்ணற்ற திறனாய்வுகள் தோன்றியுள்ளன. **பூமியைச் சுற்றியுள்ள எல்லா வகையான பௌதீக மற்றும் உயிரிகள் இணைந்தது சுற்றுப்புற சூழல் ஆகும். மனித இனம் சுற்றுச்சூழலின் ஒரு அங்கமே ஆகும் (சுற்றுச்சூழல் இயல், ப. 1)** இத்தகைய சுற்றுச்சூழலானது தன்னைத்தானே ஒழுங்கு படுத்திக் கொள்ளும் தன்மையுடையது. ஆனால் மனிதர்களின் ஆடம்பர வாழ்வானது சுற்றுச்சூழலின் சமநிலையைப் பாதித்து பேரிடர்களுக்குக் காரணங்களாக அமைகின்றன என்பதை இன்று காண முடிகிறது. எவ்வகையான பொருளும் அது படைக்கப்பட்டதற்கான காரணத்திற்கு உட்பட்ட செயல்களைச் செய்யும் போது எவ்வித பாதிப்பும் இல்லை. அவற்றில் மனிதன் தனது அறிவையும் ஆற்றலையும் செலுத்தும் போது அது அவனுக்குத் தீங்கானதாக அமைந்து விடும் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**நிலம்**

பெருங்கண்டங்களையும் தீவுகளையும் கொண்டது நிலம். இது உலகில் மொத்த பரப்பில் 29 சதவிகிதம் கொண்டுள்ளது. நிலப்பரப்பில் உள்ள மண்ணில் பல வகையான தாது உப்புகளும் கனிமங்களும் காணப்படுகின்றன. இவை எல்லா இடத்தில் வாழும் உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் பயன்படுகிறது. எனவே தான் வள்ளுவரும் நிலத்தை, **நிலமென்னும் நல்லாள் (குறள் - 1040)** என்று குறிப்பிடுகிறார். நிலத்திடமிருந்து மனிதர்கள் கற்றுக் கொள்ளும் நற்செயல்கள் பல உண்டு. அவற்றில் ஒன்று பொறுமை. நிலத்தின் மீது நாம் எதைச் செய்தாலும் நிலம் பொறுமையாக உள்ளது. உழைக்கின்றவர்களுக்கு ஏற்றவாறு மகசூல் தருகின்றது. இத்தகைய நிலமானது அளவாலும் பரப்பாலும் மிகப்பெரியது என்பதை, **நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று (குறுந்தொகை, பா. 3)** என்ற வரி பறைசாற்றுகின்றது. இதன் வாயிலாக மனிதனும் மிகப்பெரிய மனதையும் பிற உயிர்களிடம் மிகுந்த கருணையும் மனித நேயமும் கொண்டு வாழ வேண்டும் என்பதை நிலம் நமக்கு எடுத்துரைக்கிறது. மேலும் நெல் மணம் வீசிய கொங்கு நிலம் என்பதை,

**குயமாண்ட நல்லுழவர் வயல்மாண்ட நெல்லறுக்கக்**
**குலவுதோள் வளமணக்க நிலமணக்கு (முய.பூண்.பிள்.தமி., பா. 44)**

என்ற வரிகளில் காண முடிகிறது. இவற்றை ஓரளவு சமன்படுத்த உழவுத் தொழிலை மேற்கொள்வதே சிறந்த தீர்வாக அமையும்.

**சூழலியலில் உழவுத்தொழிலின் பங்கு**

உலகில் எண்ணற்ற தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழிலே சிறந்த தொழிலாகும். மனிதனது அன்றாட வயிற்றுத் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களே உழவர்கள். அதனாலேயே அவர்கள் அன்னைக்கு இணையானவர்கள்.அவர்களை நாம் வணங்க வேண்டும் இதை, **உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்** (பாரா. கவி. சுதந். பள்ளு, பா. **31)** என்று பாரதியும் குறிப்பிடுகிறார். இத்தகைய நிலத்தின் மீது விவசாயம் செய்து மக்கள் இன்பமாக வாழ்ந்து வந்தனர். தனது குடும்பத்திற்குத் தேவையான காய்கறிகள் பழங்கள் மற்றும் நெல் வகைகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொண்டனர். உழவுத் தொழிலைச் சிறப்பிக்க சிவபெருமானும், பச்சைநாயகி அம்மனும் உழவனும் உழத்தியுமாக வந்து நாற்று நட்டதை,

**எம்பு நீர்பாய் எருவயல் ஏருழவன்**
**எல்லுழத் தியானாள் ஏற்றுநாற் றுநட்டாள் (பூங். பிள். தமி. காப். பரு., பா. 3)**

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. இதன் வாயிலாக உழவுத் தொழிலின் மேன்மையை அறிய முடிகிறது. விளைந்த நெற்பயிர்கள் வயல்களில் அறுத்த பின்பு நீரின்றிக் காய்ந்து போகும். அதனால் வயல்கள் வெடித்தன. மீண்டும் மழை பெய்த பின்பு வயல்வெடிப்பில் வாழும் நண்டுகளும் நள்ளிகளும் (பெண் நண்டு) வெடிப்பிலிருந்து மேலே வரும் என்பதை,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

**வயலறுக்க வளங்காய்ந்து நிலங்காய்ந்து வயல்வெடிக்க**

**வாடிவெடிப் பிருந்துவாழ் நண்டுகள் நள்ளிகள்**

**வான்மழை தான்பெய்ய மீதேறிச் சேறாக (பூங். பிள். தமி. காப். பரு., பா. 8)**

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. நீரின்றி காய்ந்த வெடிப்புகளில் கூட நண்டுகள் தனது இனத்தோடு வாழ்ந்து வந்த வளமான நிலத்தை பெற்றிருந்ததை அறிய முடிகிறது. ஆனால் இன்று பயிர் பெருக்கத்திற்காகவும் அதிகமாக மகசூலுக்காகவும் பூச்சிக்கொல்லிகளையும், செயற்கை உரங்களையும் இட்டு விளையும் காய்கறிகளையும் விசமாக மாற்றியுள்ள நிலையைக் காண முடிகிறது. அதிகமான இரசாயன உரத்தால் உருவான காய்கறிகளில் எந்தவிதச் சத்துக்களும் இல்லை. காய்கறிகளை விற்பனை செய்வோர் பல நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்க அதன் மீது பல இரசாயனக் கலவைகளைப் பூசி விற்பதால் காய்கறிகளுக்கு பதிலாக விசத்தையே காசு கொடுத்து வாங்கி உண்ணும் நிலை வந்து விட்டது. அதனால் பெயர் தெரியாத ஏராளமான நோய்கள் நம்மைப் பற்றி கொண்டுள்ளன. அந்நோய்களை நீக்குவதற்கே வாழ்வின் பெரும் பகுதி கழிந்து விடுகிறது. வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த பணத்தை நோயை விரட்ட நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் நிலையானது இன்று உருவாகி உள்ளது. மேலும் இன்றைய நிலையில் விவசாய பூமியானது தண்ணீர் இன்றியும், பெருகிவரும் நகரமயமாதலாலும் அழிந்து வருகிறது. இதைத் தடுக்க ஒவ்வொரு குடும்பத்தாரும் அவர்களுக்கு தேவையானவற்றை தாங்களே உற்பத்தி செய்து கொள்ள ஊக்குவிக்க வேண்டும். வருங்காலத் தலைமுறைகளுக்கு உழவுத் தொழில் பற்றியும் இரசாயனம் இல்லாக் காய்கறிகளை உற்பத்தி செய்தல் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது நலன் பயக்கும்.

**நிலவாழ் உயிரினங்களும் சூழலியலும்**

இறைவன் படைத்த ஒவ்வொரு படைப்பிற்கும் ஒரு தனித்தன்மையான ஆற்றல் உண்டு. நாம் அதனை உணர்ந்து செயல்படும் போது பிற உயிர்களுக்கு நம்மால் பாதிப்பு ஏற்படாது. நிலத்தில் எண்ணற்ற பூச்சி வகைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று கரையான்.இது மண்ணில் வாழ்ந்தாலும் தன்னையும் தன்னைச் சுற்றி உள்ள பகுதியையும் மிக சுத்தமாக வைத்துக் கொள்ளும் பண்பினை உடையது. நிலத்திற்கு அடியில் பல மீட்டர் வரை பின்னலால் புற்றுக்களைக் கட்டி இருக்கும். அந்தப் புற்று மண்ணை உடலில் தேய்த்துக் குளித்தால் பல வகையான நோய்கள் தீருவதாகக் கூறப்படுகிறது. கரையான் புற்றைக் கடவுள் என வழிபடும் தன்மையும் நம்மிடையே பரவியுள்ளது. அதைப் பாம்புப் புற்றாக எண்ணி பால் மற்றும் முட்டை கொடுத்து வழிபடுவர்.கரையான்களால் கட்டப்பட்டப் புற்றை இடமாகக் கொண்ட இறைவன் என்பதை, **கட்டும் புற்றிடங்கொண்டான் கண்ணுதல் (பூங். பிள். தமி. காப். பரு., பா. 1)**என்றும் பாம்புகள் பதுங்கி வாழும் புற்றை இடமாகக் கொண்ட இறைவன் என்பதை, **பாம்புப் புற்றிடம் கொண்ட பரமனின் (பூங். பிள். தமி. காப். பரு., பா. 3)** என்ற வரிகளில் காண முடிகிறது. இதன்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

வாயிலாக உயிர்களுக்கு நன்மை செய்யக்கூடியவற்றை கடவுளாக எண்ணி வழிபட்ட நிலையை அறிய முடிகிறது. புற்றுமண் ஆனது மருத்துவ குணம் உடையது என்பதால் அதைக் காக்க இறைவனின் பெயர் சூட்டி வழிபடும் நிலையானது உருவாகி இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. அவ்வகையில் நாம் கோயில் கட்டி வழிபடுவதும் சுற்றுச்சூழலை காக்கும் சிறந்த முறையாக அமைகிறது. ஒரு செயலானது கடைபிடிக்கப்படுவதற்கான அறிவியல் காரணத்தை அறிந்து கொள்ளும் போது மூடநம்பிக்கைகள் விலகி அறிவு பெருக்கி இயற்கை சார்ந்த மருத்துவத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**ஆலயங்களும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்**

நிலத்தைத் தூய்மையாக வைத்து சுற்றுச்சூழலைக் காக்க கோயில் கட்டுவதும் ஒரு சிறந்த முறையாகும். கோவை மாவட்டம் ஒற்றைக்கால் மண்டபம் என்ற ஊரில் உள்ள கோயிலை ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கட்டியுள்ளனர். இது சூழலியல் பராமரிப்புக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது. ஊர் மக்களால் கொட்டப்பட்ட குப்பைகள், சாலை போடும் பணியாளர்கள் இட்ட குப்பைகள், இறைச்சிக் கழிவுகள், தானே வந்து சேர்ந்த குப்பைகள் ஆகிய பல வகையான குப்பைகளை ஊர்மக்கள் பலரின் உதவியினால் சுத்தம் செய்தனர். பின்பு பெரு முயற்சி எடுத்து குப்பைகளை அகற்றி அந்த இடத்தில் ஆசை கொண்டு பெருங்கோயில் கட்டி இன்று வரை பரிபாலனம் செய்து வருகின்றனர். இதை,

**ஊர்க்குப்பை தார்க்குப்பை ஊன்குப்பை உறுகுப்பை**
**உற்ற குப்பை செற்ற குப்பை**
**உழைஞரின்றி ஊர்மக்களாம் நன்மக்கள் உழைப்போர்கள்**
**உறுமுயல்வாம் பெருமுயல்வின்**
**வேர்க்குப்பை வெறுங்குப்பை தமையகற்றி வெற்றிடமாம்**
**வெறுநிலத்தின் பெருநிலத்து**
**வேணவாக் காணவே மேலான பெருங்கோயில்**
**வெறுக்கைமிகக் பெருக்கமுடன் (பூங். பிள். தமி. செங். பரு., பா. 2)**

என்ற வரிகளில் அறிய முடிகிறது. இதன் வாயிலாக குப்பைமேடான பகுதிகளையும் அனைவரும் ஒன்றிணைந்தால் கோவிலாக மாற்ற முடியும் என்பதை உணர முடிகிறது.குப்பைகளிலும் பல வகைகள் உண்டு. அவற்றில் **மக்காத குப்பைகளை எரித்தோ புதைத்தோ, சுற்றுச்சூழலை மாசு படுத்தாமல் பாதுகாக்கலாம் (பெ. சுமதி, ப. 6)** குப்பைகளின் தன்மைகளுக்கு தகுந்தாற்போல் அவற்றை அப்புறப்படுத்த வேண்டும். மேலும் சுற்றுப்புறத் தூய்மை என்பது தனி மனிதனிடமிருந்து தொடங்கி பலரும் இணைந்து செய்ய வேண்டும். ஊர் கூடித் தேர் இழுப்பதைப் போல, அவ்வாறு செய்யும் போது நாடும் வீடும் தூய்மை அடையும் என்பதைக் காண முடிகிறது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

**வழிபாட்டில் சூழலியல்**

கோயில் என்பது தூய்மையான சூழலியலைப் பறைசாற்றும் இடமாகும். கருவறையில் அமைந்துள்ள இறைவன் மனத்தூய்மை அளிப்பவராவார். தலமரமானது இன்றியமையாத மருத்துவத் தன்மை உடைய மரமாக உள்ளது. தீர்த்தக் குளமானது பலவகையான நோய்களை நீக்கும் நீர் நிலையாக உள்ளது என்பதை,

**ஊளைவாய்க் காட்டருகே ஊற்றெடுத்தே ஓடித்தான்**
**ஊர் மக்கள் பார் மக்கள்**
**உளமாசு உடல்மாசு உறுமாசு நீக்கியே**
**உறும்பேறு பெறும்பேறு (பூங். பிள். தமி. நீரா. பரு., பா. 3)**

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார். புற்றிடங்கொண்டார் கோயிலில் உள்ள தீர்த்தத்தில் நீராடினால் நோய் நீங்கி பெரும் பேறு கிட்டும் என்பதை அறிய முடிகிறது. இவ்வாறாக கோயிலின் உள்ளும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைந்த ஒவ்வொன்றுமே இயற்கையைப் பறைசாற்றும் கருவிகளாக அமைந்துள்ளன. அவற்றில் காணப்படும் அறிவியல் செய்திகளை ஆன்மீகமாக போதிக்காமல் அறிவியலுடனான உண்மையைக் கூறி வருங்கால சமுதாயத்தை வளர்த்தெடுப்பதே சிறந்ததாக அமையும். அப்போதுதான் காரணம் தெரியாமல் பல காலமாகச் செய்யும் தேவையற்ற நிகழ்வுகள் தடுக்கப்படும். அதுவே சுற்றுப்புறத்தை காப்பதற்கான விழிப்புணர்வாகவும் அமையும்.

**நீர்நிலைகளின் சிறப்பு**

நீர் நிலைகளில் ஆற்றின் தேவை பெரும்பங்கு வைக்கிறது. நீர் நிலைகள் நிரம்பி இருந்தால் நிலவளமும் சிறப்பாக இருக்கும். அவ்வகையில் மருத நிலத்தின் சிறப்பை **வயல்கள் சூழ்ந்த மருத நிலம் என்றும் செந்தாமரையில் இலக்குமியும் வெண்தாமரையில் சரஸ்வதியும் வாழும் சிறப்புமிக்க மருத நிலம் (மீனாட்சி பாலகணேஷ், ப. 3)** என்று எழில் கொஞ்சம் இயற்கைச் சூழலை மீனாட்சி பாலகணேஷ் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். ஒரு ஊருக்கு நீரின் பயன்பாடு இன்றியமையாது வேண்டப்படுகிறது. அதனாலேயே **ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் (நல்வழி, பா. 24)** என்று ஔவை குறிப்பிடுகிறார். ஆற்றில் புதுப்புனல் ஆடுவது மிகச் சிறப்புடையது. பெரும்பாலான இலக்கியங்களில் இந்நிகழ்வினைப் பதிவு செய்துள்ளனர். வெள்ளமானது சந்தனம் முதலிய மரங்கள் அனைத்தையும் அடித்துச் செல்கிறது என்பதை,

**ஆற்று வெள்ளம் ஆரமுதல் அனைத்தையும்**
**அடித்து செயல் தடித்த செயலே (பூங். பிள். தமி. காப். பரு., பா. 4)**

என்ற வரிகளில் காண முடிகிறது. இத்தகைய வளமிக்க ஆறானது புற்றிடங் கொண்டார் கோயிலுக்கு தென்பகுதியில் உள்ள நன்காட்டருகே ஓடுகிறது என்பதை, **ஊளைவாய்க் காட்டருகே ஊற்றெடுத்தே ஓடித்தான் (பூங். பிள். தமி. நீரா. பரு., பா. 3)** என்ற வரிகள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

குறிப்பிடுகிறது. இலக்கியங்களில் குறிப்பிடப்படும் புதுப்புனலானது நீர், மரம், செடி, மூலிகை, பூக்கள் ஆகிய இயற்கைத் தன்மையுடைய பொருள்களை அடித்துக் கொண்டு வரும். அதில் நீராடினால் உடலில் நோய் நீங்கும். உள்ளம் புத்துணர்வு பெறும். ஆனால் தற்போதைய நிலையில் ஆற்று வெள்ளம் மட்டும் இன்றி அருவி, கடல் நீரிலும் எண்ணற்ற கழிவுகள் கொட்டப்பட்டு மாசடைந்துள்ளன. எண்ணற்ற தொழிற்சாலைகளின் பெருக்கத்தாலும் சாயப்பட்டறை, தோல் தொழிற்சாலை ஆகிய பலவற்றிலிருந்தும் வெளியேறும் கழிவுகள் நீரில் கலக்கப்படுகிறது. இதைச் செய்வோர் தங்களது வருங்கால சந்ததியினருக்கும் பாதிப்பு உண்டாகிறது என்பதை அறிய வேண்டும். அரசும் அவற்றைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய விஷம் நீரில் பரவுவதால் மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்களும் பாதிப்படைகின்றன. நீரே விஷமாக மாறும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். நீரானது இயற்கை உலகிற்கு அளித்த கொடையாகும்.அதன் சிறப்பை உணர்ந்தே **நீரின்றி அமையாது உலகு (நற்றிணை, பா. 1)** என்று கபிலர் தனது பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார். நீரும் நிலமும் இன்றி உயிர்கள் வாழ முடியாது வருங்காலத் தேவைகளுக்கு பணத்தை மட்டுமே பெருக்க வேண்டும் என்ற சிந்தனையோடு ஓடிக் கொண்டிருந்தால் நாம் அழித்துக் கொண்டிருக்கும் இயற்கையே நம்மை அழிக்கும். இதை உணர்ந்து செயலாற்ற வேண்டும். இவ்வாறாகக் கோயில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அனைத்தும் மனிதர்களது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாகவே படைக்கப்பட்டது. அத்தகைய சுற்றுச்சூழலை நாம் மாசுபடுத்தாமல் பாதுகாப்பது நமது ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாக அமைகிறது.

**ஓசோன் பாதிப்பும் - பாதுகாப்பும்**

காற்று மண்டலத்தில் உள்ள ஓசோன் படலம் பூமியில் வாழும் உயிர்களைப் புற ஊதாக் கதிர்களிடமிருந்து பாதுகாக்கிறது. **ஓசோன் என்பதற்கு மணமுள்ள என்று பொருள் (சுற்றுச்சூழல் இயல், ப. 269)** காடுகளில் உள்ள மரங்களின் அழிவால் ஓசோன் படலமானது பாதிக்கப்பட்டு மக்களுக்குப் புற்றுநோய் போன்ற பல்வேறு வகைப்பட்ட நோய்களை உண்டாக்குகிறது. இத்தகைய கொடிய புற்றுநோயை விரட்ட இறைவன் புற்றில் அமர்ந்து இருக்கிறார் என்பதை,

**ஏங்கிடும் புற்றுநோய் இங்கிருந்தே ஓட்டவே**
**எழில்புற்றில் தொழில் கொண்டாய் (பூங். பிள். தமி. வரு. பரு., பா. 2)**

என்ற வரிகளில் சென்னியப்பனார் குறிப்பிடுகிறார். இவ்வாறாக இயற்கை நமக்கு கொடையாக அளித்த மரங்களையும் தாவரங்களையும் பாதுகாத்து இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால் மட்டுமே நோயின்றி வாழ முடியும். சூழலியலையும் அதைச் சார்ந்துள்ள இயற்கை பொருள்களையும் அழிப்பது மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொள்வதற்கு சமமாகும் என்பதை அறிய வேண்டும்.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

## முடிவுரை

மனிதர்களின் அன்றாட செயல்பாடுகள் அனைத்தும் சுற்றுச்சூழலைச் சார்ந்தே அமைகின்றன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. நிலம் மற்றும் அதில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை உணர முடிகிறது. மேலும், இப்பிள்ளைத் தமிழின் வாயிலாக உழவுத் தொழிலை பெருக்குவதன் மூலம் சுற்றுச்சூழலினை பாதுகாக்க முடியும் என்பதை அறியமுடிகிறது. காலம் தோறும் மக்கள் மேற்கொண்டு வரும் வழிபாட்டு முறைகளிலும் அவற்றைச் சார்ந்துள்ள ஆலயங்களிலும் சுற்றுச்சூழலைக் காப்பதற்கான காரணங்கள் அமைந்துள்ளன என்பதை இப்பிள்ளை தமிழின் வாயிலாக உணர முடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் ஐந்தாம் நாள் உலக சுற்றுச்சூழல் தினமாக கொண்டாடப்படுகிறது. வருடத்தில் ஒரு நாள் மட்டும் இன்றி வருடம் முழுவதும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை நாம் பெற்றிருந்தால் மட்டுமே இயற்கையையும் அதைச் சார்ந்த அனைத்தையும் தூய்மையாகவும் அவற்றின் சமநிலை குலையாமலும் நாம் வைத்திருக்க முடியும். ஒவ்வொரு தனி மனிதனுக்கு இதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நாகரிகமாக வாழ்வது என்பது இயற்கையை அழித்து வாழ்வதல்ல.அதனோடு ஒன்றி வாழ்வது என்பதை புரிய வைக்க வேண்டும். எனவே, இயற்கையைப் பாதுகாத்து வருங்காலச் சந்ததிகளை நோயற்ற சந்ததிகளாக உருவாக்கி ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கி நமது பயணம் தொடர வேண்டும்.

## துணை நின்ற நூல்கள்

[1] அன்பழகன், க, முனைவர் (ப.ஆ). *வாக்குண்டாம் - நல்வழி.* சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு - 2016.

[2] இராமரத்தினம் (உ.ஆ). *குறுந்தொகை மூலமும் உரையும்.* கங்கை புத்தக நிலையம், சென்னை, முதல் பதிப்பு - 2002.

[3] உஷாராணி, சு, முனைவர் (உ.ஆ). *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் (பாகம் 1).* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு -2019.

[4] கவிதா, ஜெ, முனைவர். "தமிழ் இலக்கியத்தில் சுற்றுச்சூழலில் அழகியல் கோட்பாடு." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* E - ISSN: 2581 - 7140, சிறப்பிதழ் , ஜூன் - 2023.

[5] கௌமாரீஸ்வரி, எஸ் (ப. ஆ). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை, பதினொன்றாம் பதிப்பு - 2011.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

[6] சென்னியப்பனார், ந. இரா, முனைவர். "அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ்." அருள்மிகு திருமுருகநாதசுவாமி அறக்கட்டளை, திருமுருகன் பூண்டி, முதல் பதிப்பு - 2004.

[7] சென்னியப்பனார், ந, இரா, முனைவர். *அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ்.* பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கோயம்புத்தூர், முதல் பதிப்பு - 2005.

[8] சுமதி, பெ, முனைவர். "அறிவியல் வளர்ச்சியும் சுற்றுச்சூழல் மாசுபாடும்." *சான்லாக்ஸ், பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்,* ISSN: 2454 – 3993, மலர் 3, தொகுதி 2, அக்டோபர் 2018.

[9] தர்மராஜ், ஜே. *சுற்றுச்சூழல் இயல்.* டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி, பத்தாம் பதிப்பு - 2019.

[10] மகாதேவன், கதிர், முனைவர், (உ.ஆ). *நற்றிணை.* வர்த்தமானர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2022.

[11] மீனாட்சி பாலகணேஷ். "பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் ஐவகை நிலங்கள்." *வல்லமை மின்னிதழ்,* ISSN: 2348 – 5531, மார்ச் – 2018.

[12] விஸ்வநாதன், கே, முனைவர். *சுற்றுச்சூழலும் தற்சார்பும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு-2015.

## References

[1] Anbalagan, Ka, Dr. *Vakkundam - Nalvazhi*. Saraswathi Mahal Noolagam, Tanjore, First Edition - 2016.

[2] Iramarathinam. *Kurunthogai Moolamum Urayum*. Gangai Puththaka Nilayam, Chennai, First Edition - 2002.

[3] Usharani, Su, Dr. *Bharathiyar Kavithaikal Moolamum Thelivurayum Part - 1*.Varththamanar Pathipagam, Chennai, First Edition - 2019.

[4] Kavitha, J, Dr. "Tamil Ilakkiyaththil Soolaliyalil Azhagiyal Kotpadu." *International Journal of Tamil Language and Literary Studies*, E - ISSN: 2581 - 7140, Special Issue, June - 2023.

[5] Goumareeswari, S. *Tolkappiyam Porulathikaram*. Sarada Pathipakam, Chennai, Eleventh Edition - 2011.

[6] Senniappanar, Na. Ira, Dr. *Arultharu Muyangu Poonmulai Valliammai Pillaithamil*. Arulmiku Thirumuruganathaswamy Arakkattalai, Thirumurugan Poondi, First Edition - 2004.

[7] Chenniappanar, Na. ira, Dr. *Arultharu Poongothaiyannai Pillaithamil*. Panniru Thirumurai Aaivu Maiyam, Coimbatore, First Edition -2005.

[8] Sumathi, Dr. "Ariviyal Valarchiyum Sutrusoolal Maasupadum." *Shanlax International Journal of Tamil Studies*, Journal - 3, Volume 2, October -2018, ISSN :2454 - 3993.

[9] Dharmaraj, J. *Sutrusoolaliyal*. Dency Publications, Sivakasi, 10th Edition - 2019.

[10] Mahadevan, Kathir, Dr. *Natrinai*. Varthamanar Pathipagam, Chennai, Second Edition - 2022.

**E-ISSN: 2581-7140** **UGC CARE Listed Journal**
**Volume - 6, Special Issue - 1, October 2023** **Available at: www.ijtlls.com**

[11] Meenakshi Balaganesh. "Pillaitamil Ilakkiyangalil Aivagai Nilangal." *Vallamai*. E - Journal, ISSN: 2348 – 5531, March - 2018.
[12] Viswanathan, K, Dr. *Sutrusoolalum Thatcharbum*. New Century Book House, Chennai, Third Edition-2015.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.